QMD

**10** - ஆம் வகுப்பு

காலம் : 3.15 மணி

# காலாண்டுத் தேர்வு - 2025

# தமிழ்

MADURAI DT

மதிப்பெண்கள் : 100

## பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.** 15 X 1 = 15

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் ..................... .
   அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
   இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா
2. மகிழுந்து வருமா? என்பது ..................... .
   அ) விளித்தொடர் ஆ) எழுவாய்த் தொடர்
   இ) வினையெச்சத் தொடர் ஈ) பெயரெச்சத் தொடர்
3. காலில் அணியும் அணிகலனைக் குறிப்பது .................. .
   அ) சுட்டி ஆ) கிண்கிணி இ) குழை ஈ) சூழி
4. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு' - இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
   அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
   இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து
5. உவப்பின் காரணமாக அஃறிணையை உயர்திணையாகக் கொள்வது ............... .
   அ) இட வழுவமைதி ஆ) பால் வழுவமைதி இ) திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி
6. கீழ்க்காண்பனவற்றுள் எந்த இலக்கியம் பிறமொழிப் படைப்பினைத் தழுவித் தமிழில் படைக்கப்பட்டது?
   அ) திருக்குறள் ஆ) கம்பராமாயணம் இ) கலித்தொகை ஈ) சிலப்பதிகாரம்
7. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் எது?
   அ) இகழ்ந்தால் என் மனம் இறந்துவிடாது ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
   இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என் மனம் ஈ) என் மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
8. **பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

| | | | |
|---|---|---|---|
| அ) கொண்டல் | - | 1) மேற்கு | அ) 1,2,3,4 |
| ஆ) கோடை | - | 2) தெற்கு | ஆ) 3,1,4,2 |
| இ) வாடை | - | 3) கிழக்கு | இ) 4,3,2,1 |
| ஈ) தென்றல் | - | 4) வடக்கு | ஈ) 3,4,1,2 |

9. காலம் கரந்த பெயரெச்சம் ..................... .
   அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை இ) வினைத் தொகை ஈ) உம்மைத் தொகை
10. வங்க மொழியில் எழுதப்பட்ட கீதாஞ்சலி எனும் கவிதை நூலின் ஆசிரியர் யார்?
   அ) ஷேக்ஸ்பியர் ஆ) மணவை முஸ்தபா
   இ) மு.கு. ஜகந்நாதர் ஈ) இரவீந்தரநாத் தாகூர்
11. படர்க்கைப் பெயரைக் குறிப்பது எது?
   அ) யாம் ஆ) நீவீர் இ) அவர் ஈ) நாம்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்
செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த
அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி
முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் ..................... .
   அ) தமிழ்ச்சிட்டு ஆ) கனிச்சாறு இ) நூறாசிரியம் ஈ) பாவியக்கொத்து

13. இப்பாடலின் ஆசிரியர் .................... .

அ) கண்ணதாசன் ஆ) பாரதியார் இ) பெருஞ்சித்திரனார் ஈ) பாரதிதாசன்

14. இப்பாடலடியில் உள்ள மோனைச் சொற்களைக் கண்டறிக.

அ) உந்தி – செந்தா ஆ) அந்தும்பி – முந்துற்றோம்

இ) உந்தி – உணர்வெழுப்ப ஈ) அந்தும்பி – பாடும்

15. தும்பி – பொருள் கூறுக.

அ) கழுத்து ஆ) வண்டு இ) மூக்கு ஈ) பறவை

பகுதி – II (மதிப்பெண்கள் : 18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

**21-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 4 X 2 = 8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) பரிபாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.

ஆ) 18-ஆம் நூற்றாண்டு வரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன.

17. மொழிபெயர்ப்பின் பயன் குறித்து எழுதுக.

18. "மன்னுஞ் சிலம்பே ! மணிமேகலை வடிவே !
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

19. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

20. நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் – மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம் – இது போன்ற உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

21. `பல்லார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.** 5 X 2 = 10

22. **தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

அ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

ஆ) குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

23. **இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

அ) மடு – மாடு ஆ) சிறு – சீறு

24. **வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

அ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

ஆ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

25. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களின் வகையைக் கண்டறிந்து விரித்து எழுதுக.

26. **கலைச் சொற்கள் தருக.** அ) Culture ஆ) Feast

**(செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா)**

**சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

தேன், விளக்கு, மழை, வான், மணி, பூ.

27. பழமொழிகளை நிறைவு செய்க.

அ) உப்பிட்டவரை ........................ .

ஆ) விருந்தும் ........................ .

28. **பகுபத உறுப்பிலக்கணம் தருக.** அமந்தான்

பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2 X 3 = 6

29. `புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'.
இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையாலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான் ........... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு `நீர்' தன்னைப் பற்றிப் பேசினால் ............. உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு, முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால் தான் `விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.
அ) விருந்தினர் என்போர் யாவர்?
ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?
இ) இவ்வுரைப் பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண். 34க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.** 2 X 3 = 6

32. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.
அ) `அன்னை மொழியே' – எனத் தொடங்கி `மண்ணுலகப் பேரரசே' என முடியும் `அன்னை மொழியே' பாடல். *(அல்லது)*
`புண்மியப் புலவீர்' எனத்தொடங்கும் `திருவிளையாடற் புராணப் பாடல்'.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2 X 3 = 6

35. ஏதேனும் இரண்டு வழுவமைதிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

36. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

37. **அடிக்கோடிட்ட சொற்களில் தொடர் வகைகளை எழுதுக.**
அ) <u>பழகப் பழகப்</u> பாலும் புளிக்கும் ஆ) <u>வந்தார் அண்ணன்</u>
இ) அரிய <u>கவிதைகளின் தொகுப்பு</u> இது

பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5 X 5 = 25

38. அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.
*(அல்லது)* ஆ) ஆள்வினை உடைமை அதிகாரத்தில் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

39. அ) மாவட்ட அளவில் நடைபெற்ற `மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.
*(அல்லது)* ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. எண். 9, மறைமலை நகர், மதுரை மாவட்டத்தில் வசிக்கும் கலைச்செல்வன், பொற்கொடி தம்பதியரின் மகள் இளமதி விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை இளமதியாக எண்ணிக் கொடுக்கப்பட்ட விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) புயலின் போது கடைபிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை செயல்களை வரிசைப்படுத்தி 5 கருத்துகள் எழுதுக. ***(அல்லது)***

ஆ) **மொழியெர்க்கவும்.** Translation is an art in itself. No one can do that. A translator should be natured and not attached to any language. Specifically, he should be proficient in both the languages i.e. both the language and the source language. They should be familiar with the Social and Cultural conditions of both the languages.

**(குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா)**

**உரைபத்தியைப் படித்து வினாக்களுக்கு விடைதருக.**

மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயருண்டு. மேற்கிலிருந்து வீசும்போது நான் கோடை எனப்படுகின்றேன், வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக்காற்றாகிறேன். வடக்கு என்பதற்கு வாடை என்னும் பெயருமுண்டு. வடக்கிலிருந்து வீசும்போது வாடைக்காற்று எனப்படுகிறேன். நான் பனிப்பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக்காற்று எனவும் அழைக்கப்படுகிறேன்' என்று காற்று பேசியது.

அ) மேற்கு என்பதற்கு வேறுபெயர் யாது?

ஆ) வாடை என்பது எத்திசையைக் குறிக்கிறது?

இ) ஊதைக்காற்று என்று அழைப்பது ஏன்?

ஈ) மேற்கிலிருந்து வீசும் காற்று யாது?

உ) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3 X 8 = 24

43. அ) நாட்டுவளமும் சொல் வளமும் தொடர்புடையது என்பதைப் பாவாணர் வழி நின்று விளக்குக. ***(அல்லது)***

ஆ) சங்ககாலத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பைச் சான்றுகளுடன் விளக்குக.

44. அ) பிரும்மம் கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர்போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க. ***(அல்லது)*** ஆ) `கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' - என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம். அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) முன்னுரை - தமிழன்னையின் அணிகலன்கள் - தமிழ்ச் சான்றோர் - தமிழின் வளர்ச்சி - தமிழின் எதிர்காலம் முடிவுரை. மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு `சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. ***(அல்லது)***

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி மதிப்புரை எழுதுக. பள்ளி ஆண்டு விழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்புகள் : நூலின் தலைப்பு - நூலின் மையப்பொருள் - மொழிநடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர்.